பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 81331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 9 (25—10—72) புதன் — வெளியூர்: ஐப்பசி 10 (26—10—72) வியாழன் [இதழ்: 109

தொழில் பாதுகாப்புப் படை — 100 நிறுவனங்களில் பொறுப்பேற்கும்

ஐதராபாத், அக். 25—

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 100-க்கு மேற்பட்ட மத்தியத் துறை அரசு நிறுவனங்கள்—துறைமுகங்கள் — விமான நிலையங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பை மத்திய தொழில் பாதுகாப்புப் படை ஏற்கும்.

நாடாளுமன்றச் சட்டத்தின்கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 7 அணிகளுடன் அப்படை அமைக்கப்பட்டது; இப்பொழுது அதில் 21 அணிகள் உள்ளன.

ஒட்டக நிலையில் இருப்பவர்கள் கொக்குகளைப் பார்த்துக் குறை சொல்லுவதா?

குட்டை குழப்புபவரின் நாணயம்

13 தடவை முன்னறிவிப்புத் தந்தும் மூன்றாண்டுக் கணக்கைத் தரவில்லை

வழக்கு மன்றம் சென்றால் உண்மை விளங்கிவிடும்

'ஒட்டுக் காங்கிரசு'த் தலைவரின் பொறுப்பற்றத்தனம்— பொதுச்செயலாளர் நாவலர் விளக்கம்

சென்னை, அக். 25—

"உடம்பெல்லாம் வளைவும் நெளிவுமாக இருக்கின்ற ஒட்டகம், 'ஏன் உன் கழுத்து வளைந்திருக்கிறது' என்று கொக்கைப் பார்த்துக் கேட்டதாம்! கொக்கு, தேவைக்கு ஏற்ப வளையும் — நிமிரும்; ஆனால், அந்த ஒட்டக நிலையில் இருப்பவர்கள்தான் கொக்குகளைப் பார்த்துக் குறை சொல்லுகிறார்கள்"

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னை 91-வது வட்டத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா சிலைத் திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"1953-ம் ஆண்டில்தான் தி. மு. கழகத்திற்கு வந்தார் எம். ஜி. ஆர்.; இன்றைக்கு, 'நான்தான் கழகம் — கழகம்தான் நான்' என்று சொல்லும் அளவுக்கு ஆகிவிட்டார்!

'நான்தான் காங்கிரசுக் கட்சி—காங்கிரசுக் கட்சிதான் நான்' என்று காந்தியார் சொன்னதுண்டா?

'இரும்பு நெஞ்சம் படைத்தவன் — கொடியவன் — சர்வாதிகாரி' என்றெல்லாம் வர்ணிக்கப்படும் இட்லர்கூட 'நான்தான் நாஜிக் கட்சி—நாஜிக் கட்சிதான் நான்' என்று சொல்லிக்கொண்டதில்லை! ஆனால் இவர் சொல்கிறார்!

கழகத்தை வளர்ப்பதில் எவ்வளவோ கொடுமைகளையெல்லாம் நாம் தாங்கியிருக்கிறோம்; கிளரியத்தில் — வெங்காற்றில் நானும், கலைஞரும் கலந்துகொண்ட கூட்டத்தைத் தடுக்க கத்தி — கம்பு — வேல் — அரிவாள் எல்லாம் கொண்டுவந்தார்கள்; அப்படிப்பட்ட எதிர்ப்பையெல்லாம் தாண்டி கழகத்தை வளர்த்திருக்கிறோம்.

ஆனால், எம். ஜி. ஆர். சொல்கிறார் — 'நான்தான் கழகம் — கழகம்தான் நான்' என்று; 'தைரியமிருந்தால் நீங்களும் சொல்லுங்களேன்' என்கிறார்; தைரியம்தானா இதற்கு அடிப்படை?

1944-ல் ஒரு சோதனை வந்தது; நீதிக் கட்சியிலிருந்து திராவிடர் கழகம் பிரிந்தது.

1946-ல் இன்னொரு சோதனை வந்தது; நம்மை ஆளாக்கிய தந்தை பெரியாரோடு நாம் மாறுபட்டோம்; சீர்திருத்தக் கொள்கைக்கு மாறாக அவர் திருமணம் செய்துகொள்ள விரும்பினார்; தூதுக் குழு அனுப்பினோம்; மெஜாரிட்டி அண்ணாவின் பக்கம் இருந்தது; 'வேதனைப்படுகிறோம்—வெட்கப்படுகிறோம்' என்று 'திராவிட நாடு' ஏட்டில் அண்ணா அவர்கள் எழுதினார்.

பெரும்பான்மையினர் நம்மோடு இருந்தபோதிலும், 'பெரியாரிடம் தகராறு வேண்டாம்; 'விடுதலை' அவரிடம் இருக்கட்டும்; மற்றவைகளும் வேண்டாம்' என்று துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெளியேறினோம்!

அப்போது நான், 'கண்டனக் கணைகள்' என்ற தலைப்பில் எழுதலானேன்; அண்ணா அவர்கள், 'கண்ணீர்த் துளிகள்' என்று அந்தத் தலைப்பை மாற்றினார்; அன்று உண்டான சோதனைகளையெல்லாம் அண்ணா வென்றார்.

பிறகு சம்பத் நம்மோடு மாறுபட்டார்; கணக்குக் கேட்டுக் குழப்பம் செய்தார்; 'கலந்து பேசுவோம்' என்றார் அண்ணா; அதற்கு உடன்படாமல், எழுத்துவன்மையும் — பேச்சுவன்மையும் கொண்ட சம்பத் கழகத்தை விட்டு வெளியேறினர்.

இப்போதுபோல் அப்போதும், பத்திரிகைகளெல்லாம் அந்தச் செய்தியைப் பக்கத்திற்குப் பக்கம் பெரிது பெரிதாக வெளியிட்டன.

தேர்தலில் நின்ற சம்பத், 'சிங்கத்தைக் குகையிலேயே சந்திக்கப்போகிறேன்' என்றார்; 'குகையிலிருந்து வெளியே வரப்போவது சிங்கமா—ஆளா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்' என்றுதான் அண்ணா சொன்னார்; அதற்குப் பிறகு நடந்ததை நீங்கள் அறிவீர்கள்!

காந்தியாரின் வலதுகரம் போலிருந்த இராஜாஜி — 'அறிவாளிகளின் தலைவர்' என்று பாராட்டப் பெற்றவர் — காந்தியாரின் சம்பந்தி — இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக விளங்கியவர் — அந்த இராஜாஜியே கழகத்தை அழிக்க முயன்றார் — தோற்றார்!

ஆள் அம்பு — படைபலம் — பணபலம் எல்லாம் வைத்துக்கொண்டு நேருவின் வலதுகரம் போலிருந்த காமராசர், 'கழகத்தை ஒழித்துவிட்டுத்தான் மறுவேலை' என்று நின்றார் தோற்றார்!

இப்போது எம். ஜி. ஆர். கிளம்பியிருக்கிறார் — கணக்குக் கேட்கிறார்!

ஒவ்வொரு சிறப்புக் கூட்டத்திலும், மாநாட்டிலும், வரவையும்—செலவையும் கணக்குப் போட்டுக் காட்டிய கட்சி தி. மு. கழகம் தவிர வேறு கட்சி ஏதாவது உண்டா? இந்தியாவில் — எந்த மாநிலத்திலாவது உண்டா?

தேர்தல் நிதியைக்கூடக் கணக்கு வைத்திருந்து அறிவித்த கட்சி தி. மு. கழகம் தவிர வேறு கட்சி உண்டா? யார் யார் எவ்வளவு தந்தார்கள் — எந்த மாநாட்டில் எவ்வளவு வசூல் — செலவு போக மீதம் எவ்வளவு — என்பனவற்றைப் பத்திரிகை மூலம் அறிவித்த இயக்கம் தி. மு. கழகத்தைத் தவிர வேறு கட்சி உண்டா?

போர் நிதிக்காக நடந்த நிதிக் கூட்டத்தின் கணக்கையே இன்னும் இந்திரா காங்கிரசார் காட்டவில்லையே!

ஆண்டுக்கு ஆண்டு வரவு — செலவுக் கணக்கு வைக்கப்பட்டு — அதனைத் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தணிக்கைக் குழுவினரான ஆசைத்தம்பி, அரங்கண்ணல், பொன்னுவேலு, சி. வி. இராசகோபால் ஆகியோரால்

(4-ம் பக்கம் பார்க்க)

பொதுச்செயலாளர் நாவலர் அறிக்கை — எம்.ஜி.ஆர். கூற்றுக்கு மறுப்பு

அறிஞர் அண்ணாவுக்கு மருத்துவச் செலவு — தி. மு. கழகமே ஏற்றது

மக்களிடம் நிதியாகப்பெற்று செலவுத் தொகையைச் செலுத்தியது பற்றி விளக்கம்

சென்னை, அக். 25—

"புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், 23-10-72 அன்று காஞ்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அறிஞர் அண்ணா அவர்களுக்குச் சிகிச்சை அளித்த வகையில் ஏற்பட்ட செலவுகளைத் தாமே ஏற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"மருத்துவச் செலவுகளுக்காகத் தலைமைக் கழகம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் குறித்துக் கீழ்க்காணும் விளக்கத்தைத் தலைமைக் கழகம் தெரிவிக்க விரும்புகிறது"

என்று, குறிப்பிட்டுப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:—

"அறிஞர் அண்ணாவின் சிகிச்சை நிதி அளிக்குமாறு பொதுமக்களைக் கேட்டு அம்மாதிரிய கழகப் பொருளாளர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 3-12-68-ல் வேண்டுகோள் அறிக்கை விடுத்தார்.

கலைஞர் கருணாநிதி அவர்களின் அறிக்கைக்கேற்ப, தனிப்பட்ட தோழர்களாலும், சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், கலைஞர் கருணாநிதி அவர்கள் மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்தபோது திரட்டிய வகையிலும், சிறப்புக் கூட்டங்கள் மூலமும் மொத்த நிதியாகக் கிடைத்த தொகை ரூ. 1,58,004 ஆகும்.

இந்தத் தொகையில், அறிஞர் அண்ணா அவர்களுடன் அமெரிக்கா சென்ற தோழர்களான இரா. செழியன், க. இராசாராம் ஆகியோருக்கான வழிச் செலவு மற்றும் அமெரிக்காவில் தங்கியபோது ஆன செலவுகளுக்காகக் கொடுக்கப்பட்ட [illegible] தொகை [illegible] ரூ. 12,000 [illegible]0.

அ[illegible] இராணி அம்மையா[illegible]க்கும், திரு. பரி[illegible] போக வர விமானக் [illegible]ணம் — அமெரிக்காவில் இருவருக்கும் ஆன செலவு ஆகியவற்றுக்காக முன்கூட்டித் தமிழக அரசு செய்த செலவுத் தொகையைக் கழகச் சார்பாகப் பொருளாளர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அரசாங்கத்துக்கு 12-9-68-ல் திரும்பிச் செலுத்திய தொகை — 7—10—68-ஆம் நாளிட்ட அரசாங்க ஜி ஓ. 1993 விவரப்படி ரூ. 38,770 ஆகும்.

அடுத்து, அறிஞர் அண்ணா அவர்களுக்கும், உடன் சென்ற டாக்டர் சதாசிவம் அவர்களுக்கும் ஆனவிமானக் கட்டணம் — அங்கு தங்கியிருந்தபோது ஆன செலவுகள் — அமெரிக்க மருத்துவ மனையில் மருந்துகளுக்காக விதிக்கப்பட்ட கட்டணம் ஆகியவைகளைக் கழகமே பொறுப்பேற்றுக்கொள்ளும் அடிப்படையில் பொருளாளர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அரசாங்கத்துக்குத் திரும்பிக் கொடுத்த தொகை — அன்றைய அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. இராமகிருஷ்ணன் அவர்கள் 3-1-69-ஆம் நாளிட்டுக் கழகப் பொருளாளர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்குக் கொடுத்துள்ள இரசீதுப்படி — மொத்தம் ரூ. 94,752 ஆகும்.

ஆக, அண்ணா அவர்கள் சிகிச்சைக்காகக் கழகம் தனது பொறுப்பாக ரூ. 1,58,000 அளவுக்குப் பொதுமக்களிடமிருந்து நிதியாகப் பெற்றுச் செலவு செய்துள்ளது.

இந்த வரவு—செலவுகளைக் கழகத் தணிக்கைக் குழு முறைப்படி தணிக்கை செய்து, 1970

(4-ம் பக்கம் பார்க்க)

ஆறு ஆண்டுகளாகச் சட்டமன்றத்தில் எம்.ஜி. ஆர். பேசவில்லை--இனியாவது பேசுவதற்கு அவர் முன்வரக்கூடும்

அண்ணா சிலை திறப்பு விழாவில் கலைஞர் நம்பிக்கை

சென்னை, அக். 25—

சென்னை 91-வது வட்டத்தில் இராயப்பேட்டை நெடுஞ்சாலையும் -- வி. எம். சாலையும் சந்திக்[illegible] இடத்தில் அண்ணா சிலை திறப்பு விழா நடைபெற்றது[illegible]

அன்று காலை 1[illegible]வில், அண்ணியார் இராணி அம்மையார் அவர்கள், [illegible] கொடியினை ஏற்றிவைத்தார்; பின்னர், நூற்றுக்கணக்கா[illegible]ளிய மக்களுக்கு உணவு வழங்கினர்.

விழா தொடக்கத்தில், சதாசிவம் -- சிவகங்கை சேதுராசன் -- தங்கப்பன் ஆகியோர் இசைப் பாடல்கள் பாடினர்.

இரவு 8-மணியளவில், பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் சிலை திறப்பு விழா நடைபெற்றது.

91-வது வட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினர் எஸ். வி. வேலு வரவேற்புரையாற்றினர்.

முரசொலி மாறன் எம்.பி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., நன்னிலம் நடராசன், துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாலை நிகழ்ச்சியிலும் அண்ணியார் இராணி அம்மையார் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினர்.

வட்டக் கழகத்தின் சார்பில் துளசிங்கம் எம்.சி. அனைவருக்கும் கைத்தறியாடை அணிவித்தார்; கிளைக் கழக -- பகுதிக் கழகங்களின் சார்பிலும் தலைவருக்கும் -- நாவலருக்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அண்ணா சிலையின் பீடத்தின் ஒரு பக்கத்தில், 'அண்ணாவின் பத்துக் கட்டளைகள்' என்ற தலைப்பில்—

ஊதியம் பெறு ஓய்வு நேரப் பணியாற்றல்;

தன்னலம் கருதாப் பொதுப் பணி பேணல்;

தன் மதிப்பையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தல்;

உழவும், தொழிலும் வளர உறுதுணை புரிதல்;

கல்வியறிவும், பொது அறிவும் வளர வகை செய்தல்;

பொதுநலம் காணத் துப்புரவுப் பணி மேற்கொள்ளல்;

அன்பு வழியாகச் சமூகக் கேடு களைதல்;

திக்கற்றவர்களுக்குத் துணை புரிதல்;

அறவழி நின்று அனைவருக்கும் உதவல் --

ஆகிய வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

பீடத்தின் இன்னொரு புறத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வாசகங்களான --

ஒவ்வொரு மனிதனின் இலட்சியமும் சமுதாய அடிப்படையில் அமைந்திட வேண்டும்;

கோயில் வேண்டாமென்று சொல்லவில்லை; அது கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது;

வலியோன் வியர்வையெல்லாம் பன்னீராம் -- மிக எளியோன் வியர்வையெல்லாம் செந்நீராம்;

விடுதலையின் வெளிச்சமென்னும் சவுக்கடியால், மடுதலை இருளை விரட்டிடுவோம்;

உலகம் ஒரு விசித்திரமான கண்ணாடி; சிரித்தால் அழும் -- அழுதால் சிரிக்கும் --

ஆகிய வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

விழா தொடக்கத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எம். இராசாங்கம் மறைவுக்காகக் கூட்டத்தினரால் ஒரு நிமிட அமைதி கடைபிடிக்கப்பட்டது.

கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:—

"இன்றைக்கு நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்காக நான் எம். ஜி. ஆரைக் குற்றஞ்சாட்ட மாட்டேன்; இடையிலே இருப்பவர்கள், 'இதுதான் நேரம்' என்று சிண்டு முடிகின்ற வேலையில் ஏதேதோ செய்கிறார்கள்.

பத்து நாட்களாகப் பத்திரிகை உலகமே திரும்பிவிட்டிருக்கிறது.

எம். ஜி. ஆருக்கு 'பாரத்' பட்டம் கிடைத்தபோது, 'ஆனந்தவிகட'னில் அட்டைப் படத்தை எதிர்பார்த்தேன் -- வரவில்லை; 'கல்கி'யில் எதிர்பார்த்தேன் -- வரவில்லை; 'மெயில்' பத்திரிகையில் பாராட்டை எதிர்பார்த்தேன் -- வரவில்லை; 'இந்து' பத்திரிகை பாராட்டி எழுதும் என்று எதிர்பார்த்தேன் -- எழுதவில்லை!

ஆனால், இரண்டு -- மூன்று மாதம் கழித்து அவருடைய படங்களை, 'தி. மு. கழகம் வாழக் கூடாது' என்று எந்தெந்தப் பத்திரிகைகள் எண்ணினவோ அந்தப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன; இந்த நிலைமை ஏன் வந்தது?

கழகத்திலுள்ளவர்கள் மோதிக்கொள்ள -- தொண்டர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் தகராறு ஏற்பட அந்தப் பத்திரிகைகள் விரும்பின; அது நடந்துவிட்டது!

எதை அண்ணா விரும்பமாட்டாரோ அது அவர் காலத்திலும் நடந்தது -- அவருடைய தம்பிமார்கள் காலத்திலும் நடந்தது.

'பத்தோடு பதினொன்றுதான்; பத்து ஒன்பது ஆகக்கூடாது' என்று அண்ணா சொல்வார்; சம்பத் காலத்தில் பத்து ஒன்பதாயிற்று; மறுபடியும் வெகு பாடுபட்டு ஒன்பதைப் பத்தாக்கி -- பதினொன்றாக்கி -- நூறாக்கி -- ஆயிரமாக்கி -- இலட்சமாக ஆக்கினோம்; மீண்டும் ஒரு சரிவு இப்போது ஏற்பட்டுவிட்டது; சரிவை, 'சரிவு' என்று ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில், இதைப் பகடைக் காயாகப் பயன்படுத்திக் கொண்டு எதிர்க் கட்சிக்காரர்கள் எவ்வளவு கும்மாளம் அடிக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

'அது தேவையில்லை' என்று எம். ஜி.ஆர். கருதினால், 25-ந் தேதிவரை தவணை இருக்கிறது; அதற்குள்ளே கூட அவர் சொல்லலாம் -- 'இப்படியெல்லாம் எதிர்க் கட்சிக்காரர்கள் பயன்படுத்துவார்கள் என்று எனக்குத் தெரியாது; ஆகவே, நான் விளக்கம் அளிக்கிறேன்' என்று அந்த வருத்தக் கடிதத்தை -- பெரியார் சொல்லியும் மறுத்த அவர் -- அந்தக் கடிதத்தைக் கழகத்திற்கு அனுப்புவாரேயானால், இன்றைக்கும் சொல்கிறேன் -- எதிரிகள் இடுப்பு ஒடிந்து போவார்கள்! இது நிச்சயம்!

நான்கு— ஐந்து எம்.எல்.ஏ.-க்கள் போய்விட்டார்கள் என்ற செய்தி வருகிறது; எத்தனைப் பேர் என்பது சட்டமன்றம் கூடுகிற நேரத்திலேதான் முடிவாகத் தெரியும்.

இதுபோல் வரும் என்று கருதித்தான் தமிழ்நாட்டு மக்கள் அப்போதே 184 பேரை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்; இதனை யாரும் மறந்துவிடக் கூடாது.

25-ந் தேதிக்குள் எம். ஜி. ஆர். மனதை மாற்றிக்கொள்ளாமல் -- வருத்தம் தெரிவிக்காமல் இன்னும் ஐந்தாறு எம்.எல்.ஏ.-க்களைச் சேர்த்துக் கொண்டாலும் அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன் -- மகிழ்ச்சியடைவேன்; ஏனென்றால், இன்றைக்கு எனக்கு எதிராக உட்கார்ந்திருக்கின்ற கட்சி காமராசர் காங்கிரசு; அது 13 பேர்களோடு இருக்கிறது; எம். ஜி. ஆர். 14 பேர்களைச் சேர்த்துக் கொண்டால், காமராசர் காங்கிரசைக் கீழே தள்ளிவிட்டு அவர்தான் முதலில் உட்காருகின்ற எதிர்க் கட்சியாக இருப்பார்.

'என் தொகுதி மக்கள் சொன்னால் நான் இராஜினாமா செய்வேன்' என்று இன்று எம். ஜி. ஆர். சொல்லி இருக்கிறார்; அப்படித் தொகுதி மக்கள் சொன்னாலும் இராஜினாமா செய்ய வேண்டாம் என்று நான் அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

எனக்கொரு ஆசை -- எம். ஜி. ஆர். அவர்களே -- உங்களுடைய பேச்சை இந்த ஆறு ஆண்டுக் காலம் -- அண்ணா முதலமைச்சராக இருந்தது முதல் இதுவரையில் -- சட்டமன்றத்தில் நாங்கள் கேட்கவில்லை; இனிமேலாவது நீங்கள் சட்டமன்றத்திற்கு வந்து பேசவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசையாகும்."

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செயற்கை மழைத் திட்டத்தை நிறுத்திவைத்திருக்கிறோம்.

கடல் நீரை நல்ல தண்ணீராக்க அதிக வெப்பம் தேவைப்படு[illegible] கல்பாக்கம் அணு மின்[illegible] செயல்பட்டால் அ[illegible] அதிக வெப்பம் கி[illegible] எனவே, இன்னும் 10 [illegible] காலத்தில் கடல் நீரை [illegible] நீராக்கும் திட்டம் இயலக்கூடும்."

சென்னையில் கருத்தரங்கு

பூமிக்கு அடியிலுள்ள நீரை வெளியே கொண்டுவருவதிலுள்ள பிரச்சினைகளை பற்றி ஆராய சென்னையில் 27, 28-ந்தேதி தேதிகளில் அகில இந்திய கருத்தரங்கு நடைபெறுகிறது; அமைச்சர்கள் எஸ். ஜே. சாதிக்பாட்சா, அன்பில் தர்மலிங்கம், சி. பா. ஆதித்தனர், தலைமைச் செயலாளர் சபாநாயகம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

'பாறைகள் உள்ள இடத்திலிருந்து எப்படித் தண்ணீரைக் கொண்டு வருவது' என்பது உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து அப்போது விவாதிக்கப்படும்.

சென்னை-புதுவை எக்ஸ்பிரஸ் இரயில்

நவம்பர் முதல் நேராக விடப்படும்

புதுவை, அக். 23—

வரும் நவம்பர் திங்களிலிருந்து சென்னைக்கும் - புதுவைக்குமிடையில் நேராக எக்ஸ்பிரஸ் இரயில் விடப்படும்.

புதுவையில் பிற்பகல் 1-25 மணிக்குப் புறப்படும்; விழுப்புரம் வழியாக சென்னைக்கு மாலை 6-10 மணிக்கு வந்து சேரும்.

சென்னையிலிருந்து காலை 8-10 மணிக்குப் புறப்படும்; புதுவைக்குப் பகல் ஒரு மணிக்கு வந்து சேரும்.

இந்த எக்ஸ்பிரஸ் விழுப்புரத்துக்கும் -- பாண்டிக்குமிடையில் சில இடங்களில் நிற்காது.

கேரளத்தில் அரசியல் கொலைகள்

புள்ளி விவரத் தகவல்

திருவனந்தபுரம், அக். 24—

"1970—71, 1971—72-ம் ஆண்டுகளில் கேரளத்தில் 53 அரசியல் கொலைகள் நடந்திருக்கின்றன" என்று போலீசுத் துறை அமைச்சர் கருணாகரன் கேரள சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

இக்கொலைகளில் மொத்தம் 426 பேர் சம்பந்தப்பட்டிருந்தனர்; கட்சி வாரி விவரம் பின்வருமாறு:—

இடது கம்யூனிஸ்டுகள் 240; முஸ்லிம் லீக் 86; புது காங்கிரசு 22; வலது கம்யூனிஸ்டு 32; கேரளக் காங்கிரசு 12; மற்றவர்கள் 84 பேர்.

கொலையுண்டவர்களின் கட்சி விவரம்:—

17 பேர் இடது கம்யூனிஸ்டு; 12 பேர் புது காங்கிரசு; 5 பேர் கேரளப் போட்டிக் காங்கிரசு; 3 பேர் முஸ்லிம் லீக்; 2 பேர் பி சோ. கட்சி; ஒருவர் ஆர். எஸ். எஸ்; 2 பேர் புரட்சி சோஷலிஸ்டுக் கட்சி; மற்றவர்கள் 7 பேர்.

'சம சீரற்ற நிலையைத் திருத்தியமைப்பீர்'

'நியாயமான நிதியுதவியைத் தர முன்வாரீர்!

திட்டத் துறை அமைச்சரிடம் தமிழக அரசு கோரிக்கை

சென்னை, அக். 25—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முதலில் வகுக்கப்பட்டபோது, 'தமிழ்நாட்டுக்கு ரூ. 250 கோடி மத்திய உதவி அளிக்கப்படும்' என்று உறுதி அளிக்கப்பட்டது; ஆனால், குறிப்பிட்ட சில அளவு கோல்களைப் பின்பற்றியதன் விளைவாக இந்தத் தொகை, பின்னர் ரூ. 202 கோடியாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

"முதலில் நிர்ணயிக்கப்பட்டபடி, 'தமிழ்நாட்டுக்கு மத்திய உதவி இருக்க வேண்டும்' என்ற எங்களது கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, 1972—73-லும், 1973—74-லும் தனி உதவித் தொகையாகத் தமிழ்நாட்டுக்கு ரூ. 48 கோடி அளிக்கலாம்.

'மத்திய அரசு திட்டப் பணிகளுக்காக மாநிலங்களுக்கு அளிக்கும் உதவித் தொகைகளில் -- இதர மாநிலங்களுடன் ஒப்பிட்டால் -- தமிழ்நாட்டுக்கான ஒதுக்கீடு மிகவும் குறைவானதாகும்; 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சம சீரற்ற இந்த நிலை திருத்தியமைக்கப்படும் என்று நம்புகிறோம்"

என்று மத்திய திட்ட அமைச்சர் டி. பி. தாரிடம் அளித்துள்ள மனு ஒன்றில் தமிழக அரசு சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறது; அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இதர கோரிக்கைகள் வருமாறு:—

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவது சம்பந்தமாக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்பாக்கம் அணு விசை நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் பெரிய மத்திய அரசாங்கத் திட்டங்களுக்குப் போதுமான எண்ணிக்கையில் அனுமதி வழங்க வேண்டும்.

தூத்துக்குடியில் தொழில்களுக்கான எண்ணெய்த் துய்மை நிறுவனம் ஒன்றுக்கும், மணலியில் பெட்ரோ--கெமிகல் நிறுவனம் ஒன்றுக்கும் (தொழிற்பேட்டை) அனுமதி தரவேண்டும்.

தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை அமைக்க வேண்டும்.

சேதசமுத்திரத் திட்டத்தை 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ள வேண்டும்.

சென்னை— மதுரை — தூத்துக்குடி இரயில் பாதையை அகல (பிராட்கேஜ்) பாதையாக மாற்றியமைக்க வேண்டும்.

சென்னையிலிருந்து தூத்துக்குடி வழியாகக் கன்னியாகுமரிக்குச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக்கொள்ள வேண்டும்'

மின்விசைத் திட்டம்-- உரிய உதவி அவசியம்

மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

கல்பாக்கம் அணுவிசை நிலையத்தின் இறுதித் தயாரிப்புச் சக்தியை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இப்போதே எடுக்கவேண்டும்.

எண்ணூர் அனல் மின்சார நிலையத்தின் தயாரிப்புச் சக்தியை விரிவுபடுத்துவது சம்பந்தமான பணியை மாநில அரசு ஏற்கனவே தொடங்கியுள்ளது; மேட்டூரிலும், தூத்துக்குடியிலும் இரண்டு அனல் மின்சார நிலையங்களை அமைப்பது சம்பந்தமான பணியையும் மாநில அரசு தொடங்குகிறது; இந்த முன்நடவடிக்கைகளுக்காக 1972--73-ல் ரூ. 5 கோடியும் -- 1973--74-ல் ரூ 26 கோடியும் மத்திய அரசு தனி உதவித் தொகையாக அளிக்க வேண்டும்; முன்நடவடிக்கைகளை எடுக்க இது அவசியமாகும்.

மாநகரின் பிரச்சினைகள்

சென்னை மாநகரின் தனிப் பிரச்சினைகளைப் பற்றியும் மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அது வருமாறு:—

சென்னை நகரில் போக்குவரத்துப் பிரச்சினை -- குடிநீர்ப் பிரச்சினை -- குடிசைகள் சீரமைப்புப் பிரச்சினை ஆகியவை கவனம் செலுத்தப்பட வேண்டியவைகளாகும்.

கல்கத்தா -- பம்பாய் நகரங்களில், இரயில் -- டிராம் மூலம் பெரும்பாலான மக்கள் பயணம் செய்கிறார்கள்: பஸ்களின் மூலம் செல்பவர்களின் சதவிகிதம் அங்கு குறைவு; ஆனால், சென்னையில் பஸ்கள் மூலம் செல்பவர்கள் அதிக சதவிகிதம் பேராவர்; இந்த நிலையை மாற்றிட நீண்ட கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்;

குறுகிய கால நடவடிக்கையாக சென்னை நகரில் வடக்கு -- வடமேற்கு இரயில் பாதைகளை மின்சார இரயில் பாதைகளாக ஆக்க வேண்டும்.

சென்னைக்குக் குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்ய வீராணம் திட்டம் மிகவும் உதவியாக இருக்கும்; இதற்கான நிதி வசதிகளுக்கு விரைவில் அனுமதி தர வேண்டும்.

சென்னை மாநகரில் குடிசைகள் சீரமைப்புப் பணிகளுக்கும் மத்திய அரசு உதவ வேண்டும்.

விரைவில் நடவடிக்கை எடுப்பது அவசியம்

மேற்குத் தொடர்ச்சி மலையின் உபரி நீரைப் பயன்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டப் பகுதியில் புதிதாக ஓர் உரத் தொழிற்சாலையைத் துவக்கத் திட்டமிடுவது அவசியம்.

விவசாயப் பொருட்களைக் களத்து மேட்டு விலைகளில் கொள்முதல் செய்யத்தக்க அமைப்புக்களை அமைக்க வேண்டும்."

ரூ.5.80 கோடி போனசு

47 ஆலைகளைச் சேர்ந்த 1,70,000 தொழிலாளர்கட்கு

பம்பாய், அக். 22—

பம்பாயில் பருத்தி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ள 47 ஆலைகளைச் சேர்ந்த 1,70,000 தொழிலாளர்களுக்கும் 1971-ம் ஆண்டுக்கான போனசாக ரூ. 5 80 கோடிவரை வழங்கப்படும்.

சமூகப் பொறுப்புணர்வு

காலம் எதிர்பார்த்ததைவிட விரைவில் வந்துவிட்டது

ஊதியம்--இலாபம்--விலைகளை இணைக்கும் கொள்கை உருவாக்கப்படும்

ஐதராபாத், அக். 25—

"தொழில் வளர்ச்சியைப் பெருக்கவும், சமூகமான தொழில் உறவுக்கும், விலை -- உயர்வைத் தடுக்கவும் ஊதியம் - இலாபம் -- விலை ஆகியவற்றை இணைக்கும் புதிய தொழிலாளர் கொள்கை விரைவில் உருவாக்கப்படும்.

"வளர்ச்சி காணும் பொருளாதாரத்தில் பாதுகாப்புடன் வாழும் காலம் முடிந்துவிட்டது; நிர்வாகத்துக்கும் -- தொழிலாளர்களுக்கும் இடையே ஒத்துழைப்புக்கும், சமூக பொறுப்புணர்வுக்கும் காலம் எதிர்பார்த்ததைவிட விரைவில் வந்துவிட்டது."

என்று, மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆர். கே. காடில்கர் குறிப்பிட்டுத் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"கூட்டுப் பொருளாதார முறை, சமுதாயத்தின் பொது நலனைப் பாதித்துவிட்டது.

வேலையின்மை--கிராமிய வறுமை -- பிற்பட்ட நிலை ஆகிய சவால்களை தொழிலதிபர்கள் ஏற்க வேண்டும்.

தொழிலாளர்களின் கௌரவமான இடத்தை நிர்வாகம் அங்கீகரித்திருப்பதால் தொழில் துறையில் மேலும் வேலை நிறுத்தங்கள் நடக்காது எனக் கருதுகிறேன்.

ஐரோப்பியப் பொது மார்க்கெட் -- சீன--ஜப்பான் சமரசம் ஆகிய இரு பெரும் தொழில் சக்திகள் உருவாகின்றன: தன் தொழில் நிபுணத்துவத்தையும், விலை -- பொருளாதாரத்தையும் தொழில் நுட்பத்தையும் இந்தியா மேம்பாடு விருத்தி செய்யாவிடில், அந்த இரு பெரிய சக்திகளில் இடையே அது சிக்கி நசுங்கிவிடும்."

பித்தாபுரம் தொடங்கிய புதிய கட்சி

பணத்தைச் செலவிட்டும் பயனற்றுப் போய்விட்டது

'எந்த இடத்திலும் ஜாமீன் தொகையைப் பெறவில்லை' என்ற பெருமையைத்தான் தேர்தலில் பெற்றது

காஞ்சிபுரம், அக். 25—

விடுதலைக் கனல் பற்றி எரிந்த நேரத்தில், நீதிக் கட்சிக்குச் செல்வாக்கு குறையத் தொடங்கியது; ஆகவே, 1938-39-ல் நடந்த தேர்தலின்போது ஒரு புதிய கட்சி தொடங்கப்பட்டது; அந்தக் கட்சியைத் தொடங்கியவர் பித்தாபுரம் மகாராஜா; அந்தக் கட்சிக்கு அவர் இட்ட பெயர் சனநாயகக் கட்சி: கட்சி மட்டும் தொடங்கவில்லை அவர் -- ஆங்கிலத்திலும், தமிழிலும் நாளிதழ்கள் தொடங்கினர்; அந்தப் பத்திரிகைகள் இனமாகவே வழங்கப்பட்டது; ஏனென்றால், மகாராஜாவின் பத்திரிகையை வாங்க அந்தக் காலத்தில் ஆள் கிடையாது!

கிளைகளை நிறுவ பல பேர்களைப் பிடித்தார்; ஒரு கட்சி வளருவதற்கு அமைப்புகள் தேவை; வைரமாக இருந்தாலும் தோடாக -- கம்மலாக -- அட்டிகையாகச் செய்யவேண்டுமானால், அதற்கு[illegible] கட்டடம் வேண்டும்; அதைத்தான் பொற்கொல்லர்கள் செய்வார்கள்; வைரக் கற்களை அப்படியே கொண்டுபோய் காதிலே வைத்துவிட்டால் அவை ஒட்டிக்கொள்ளாது.

அதைப்போல், ஒரு கட்சி வளருவதற்கு அமைப்புகள் தேவை -- கிளைகள் தேவை; அவைகள் இல்லாமல், 'நீயா-வா; இந்தா ஐயாயிரம் ரூபாய்; திருவாரூரிலே போய் சனநாயகக் கட்சிக்கு ஒரு கிளையைத் துவக்கி வை; திருச்செந்தூரில் போய் ஒரு கிளையைத் துவக்கு -- இந்தா ஆறாயிரம் ரூபாய்' என்று பித்தாபுரம் மகாராஜா கொடுத்துக் கொண்டிருந்தார்.

அம்போது கட்சிகளுக்குத் தேர்தல் சின்னம் கிடையாது; காங்கிரசுக் கட்சிக்கு மஞ்சள் பெட்டி -- ஜஸ்டிஸ் கட்சிக்கு சிவப்புப் பெட்டி -- சனநாயகக் கட்சிக்கு வெள்ளைப் பெட்டி -- முஸ்லிம் லீக் கட்சிக்குப் பச்சைப் பெட்டி.

தேர்தல் நடந்தது; முடிவு வந்தது; காங்கிரசு ஏராளமான இடங்களைப் பெற்றது.

பித்தாபுரம் மகாராஜா பணத்தைக் கொடுத்து -- கிளைகள் தொடங்கி -- பத்திரிகை நடந்து -- கிளைகள் தொடங்கிவிட்டதாக ஏஜெண்டுகள் சொல்லி -- 'தேர்தலில் எந்த இடத்திலும் ஜாமீன் தொகையைப் பெறவில்லை' என்ற பெருமையைப் பித்தாபுரம் மகாராஜா பெற்றார்; இது, 1938-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு புதிய கட்சியின் வரலாறு ஆகும்."

-- கழகத் தலைவர் கலைஞர்

(காஞ்சிபுரம் கூட்டத்தில்)

தமிழ்நாடு மின்சார வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

காட்பாடி நகர்விரிவு மத்தியப் பண்டகசாலையில், 'இருக்கும் நிலையிலேயே விற்கப்படுவதற்காக' உள்ள கீழே விவரித்துள்ள கழிவுத் துண்டுப் பொருட்களையும், வாகனத்தையும் வாங்குவதற்கும் மற்றும் அகற்றுவதற்குமான முத்திரையிடப்பெற்ற தனித்தனி விலையொப்பங்கள் அடியிற்கையொப்பமிட்டவரால் தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் அழைக்கப்படுகின்றன.

கழிவுத் துண்டுகளின் அளவு -- கடைசித் தேதி -- கட்ட வேண்டிய முன்தொகை -- கழிவுத் துண்டுகளைப் பார்வையிடல் ஆகிய விவரங்களுடன் கூடிய குறிப்புப் பிரதிகளைப் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 11—11—72-ம் நாள்வரை, 'தலைமைக் கணக்காயர் (செலவு), வேலூர் மின் திட்டம், எண் 10, கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி விரிவு (அஞ்சல்), வடாற்காடு' என்னும் முகவரியில் நேரில் பணம் கொடுத்தோ, பணவிடை மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

வரிசை எண்	ஓ.டி.எஸ். எண்	விவரம்	சுமாரான அளவு அல்லது எண்ணிக்கை
1.	55/72 73	பழுதுற்ற பழைய சோக்குகள் (chokes)	3535 எண்ணிக்கை
2.	56/72-73	5 காலன் கொள்ளளவுள்ள காலி டின்கள்	152 எண்ணிக்கை
		5 கிலோ கிராம் கொள்ளளவுள்ள காலி டின்கள்	3 எண்ணிக்கை
3.	57/72-73	40/45 காலன் கொள்ளளவுள்ள காலி டின்கள்	176 எண்ணிக்கை
		40/45 காலன் கொள்ளளவுள்ள காலி டின்கள் (கசிவன)	40 எண்ணிக்கை
4.	58/72-73	ஒரு காலனுக்குக் குறைந்த கொள்ளளவுள்ள காலிடின்கள்	15 எண்ணிக்கை
		ஒரு காலன் கொள்ளளவுள்ள காலி டின்கள்	60 எண்ணிக்கை
5.	59/72-73	காலி மரப் பீப்பாய்கள்	463 எண்ணிக்கை
6.	60/72-73	ஜி. ஐ. கழிவுத் துண்டுகள்	4297 கிலோ கிராம்
7.	61/72-73	சி. ஐ. கழிவுத் துண்டுகள்	335 கிலோ கிராம்
8.	62/72-73	அலுமினியக் கழிவுத் துண்டுகள்	3330 கிலோ கிராம்
9.	63/72-73	தாமிரக் கழிவுத் துண்டுகள்	2483 கிலோ கிராம்
10.	64/72-73	பித்தளைக் கழிவுத் துண்டுகள்	285 கிலோ கிராம்
		S C. மின் குமிழ்களின் பித்தளை மூடிகள் (Brass S.C. Bulbs caps)	384 எண்ணிக்கை
11.	65/72-73	ஈயக் கழிவுத் துண்டுகள்	458.5 கிலோ கிராம்
		பாட்டரி செல்களின் ஈயக் கழிவுத் துண்டுகள்	2450 ,,
12.	66/72-73	VIR மற்றும் WPTC கேபிள் கழிவுத் துண்டுகள் (தாமிரம்)	1124.7 ,,
13	67/72-73	VIR கேபிள் கழிவுத் துண்டுகள் (அலுமினியம்)	1178.1 ,,
14.	68/72-73	O.G. கேபிள் கழிவுத் துண்டுகள்	1017 ,,
15	69/72 73	மரக் கம்பக் கழிவுத் துண்டுகள்	6170 ,,
16.	70/72-73	கள்ளிமரக் கழிவுத் துண்டுகள்	8740 ,,
17.	71/72-73	பயன்படுத்த முடியாத பழைய டயர்கள்	217 எண்ணிக்கை
18.	72/72-73	பயன்படுத்த முடியாத டியூப்கள்	289 எண்ணிக்கை
19.	73/72-73	ரப்பர் கழிவுத் துண்டுகள்	111 கிலோ கிராம்
20.	74/72 73	மோட்டார் வாகனக் கழிவுத் துண்டுகள்	1328 கிலோ கிராம்
21.	75/72-73	பயன்படுத்த முடியாத பழைய பாட்டரிகள்	21 எண்ணிக்கை
		பயன்படுத்த முடியாத பாட்டரி செல்கள்	54 எண்ணிக்கை
22.	76/72-73	ACSR கழிவுத் துண்டுகள்	3717 கிலோ கிராம்
23.	77/72-73	மின்னிலைய பாட்டரிகளின் கண்ணாடிக் கொள்கலன்கள் (Glass containers of Station Battery)	45 எண்ணிக்கை
24.	78/72 73	ஸ்டுடிபேக்கர் வான் எம்டிஎஸ் 3021 (condemned)	1 எண்ணிக்கை

மேற்பார்வைப் பொறியாளர்,
வேலூர் மின் திட்டம்

தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றுக்குறை-- நிபுணர் குழு ஆராயும்

குறுகிய கால நடவடிக்கைக்கும் யோசனை கூறும்

திட்ட அமைச்சர் டி. பி. தார் அறிவிப்பு

சென்னை, அக். 24—

"தமிழ்நாட்டிலும் -- நாட்டின் மற்ற பகுதிகளிலும் மின்சாரப் பற்றுக்குறையைச் சமாளிப்பதற்கும், மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வழிவகைகளைக் கூறத் திட்டக் குழு உடனடியாக நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்கும்; இந்தக் குழுவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இடம் பெறுவர்; அது 15 நாட்கள் அல்லது மூன்று வாரங்களில் தன்னுடைய அறிக்கையை அளிக்கும்"

என்று மத்திய திட்ட அமைச்சர் டி. பி. தார், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாநிலத்தின் திட்டம் -- உற்பத்திப் பிரச்சினைகள் பற்றி மாநிலத் திட்டக் குழுவுடனும் -- முதலமைச்சருடனும் விவாதித்த அமைச்சர் டி. பி. தார் மேலும் கூறியதாவது:—

"நெய்வேலி அனல் மின்சாரத் திட்டம் போன்றவைகள் உட்பட குறுகியகாலப் பரிகாரங்கள் பற்றி குழு ஆராயும்; குறுகிய காலத்தில் பலன் தரக்கூடிய திட்டங்கள் மீது முன்கூட்டி நடவடிக்கை எடுப்பது பற்றியும் அது யோசனை தெரிவிக்கும்.

நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் இப்போது உள்ள மின்சார உற்பத்தி இயந்திரங்களிலிருந்து முடிந்தவரையில் அதிக மின்சார உற்பத்தியைப் பெறுவதற்காக அந்த மின்சார நிலையத்தை, எண்ணெயைக் எரிபொருளாகக் கொண்டு இயக்கும் சாத்தியக்கூரையும் நிபுணர் குழு பரிசீலிக்கும்.

இப்போது போதிய பழுப்பு நிலக்கரி சப்ளை இல்லாததால் அதன் உற்பத்தித் திறனில் (600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தித் திறனுடையது நெய்வேலி அனல் மின்சார நிலையம்) மூன்றில் ஒரு பங்குகூட உற்பத்தியாக வில்லை.

மாநிலத்திலும் -- நாட்டிலும் மின்சாரப் பற்றுக்குறையைச் சமாளிப்பதற்கான குறுகியகால -- நீண்டகால நடவடிக்கைகளுக்குப் பூர்வாங்கமாக இது பரிசீலிக்கப்படும்."

விவசாயக் கல்வியில் மாபெரும் முன்னேற்றம்

இந்தியாவில் தற்போது (1972 மார்ச் நிலவரப்படி) 12,800 மாணவர்கள் விவசாயக் கல்வி பயின்று வருகின்றனர்.

1947-ம் ஆண்டுவாக்கில் 1,400 மாணவர்கள் மட்டுமே விவசாயக் கல்வி கற்று வந்தனர்.

1947-ல், விவசாயக் கல்வி கற்பிக்கும் 17 கழகங்கள் இந்தியாவில் இருந்தன; இந்த எண்ணிக்கை 1972 செப்டம்பரில் 93 ஆக உயர்ந்திருக்கிறது.

தற்போது நமது நாட்டில் மொத்தம் 18 விவசாயப் பல்கலைக் கழகங்கள் உள்ளன.

1941-ம் ஆண்டில் 5 கல்லூரிகள் விவசாயப் பாடத்தில் பட்ட மேற்படிப்பு நிலைக் கல்வி கற்பித்து வந்தன; 1971-ல் இத்தகைய கல்லூரிகளின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்தது.

கால்நடை மருத்துவத் துறையில் தற்போது 20 கல்லூரிகள் பட்ட மேற்படிப்பு கல்வி கற்பித்து வருகின்றன; 1955-ல் ஒரே ஒரு கல்லூரி மட்டுமே இயங்கி வந்தது.

விவசாயத் துறையிலும், கால்நடை மருத்துவத் துறையிலும் பட்டம் பெறும் மாணவர்களில் சுமார் 25 சதவிகிதம் பேர் பட்ட மேற்படிப்பு கல்வி பயிலச் செல்கின்றனர்.

செயற்கை மழை திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதேன்?

இடையூறுக்கான நிலைபற்றி விளக்கம்

சென்னை, அக். 24—

தமிழ்நாட்டில் பூமிக்கு அடியில் எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் கிடைக்கும் என்பது குறித்து ஆராய நில நீர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது; இந்த நிலையத்தின் இயக்குநர் பஞ்சநாதன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:—

"சென்னையில் தண்ணீர் தட்டுப்பாட்டைச் சமாளிக்கக் கடல் நீரை நல்ல தண்ணீராக மாற்றுவது -- செயற்கை மழை பெய்யச் செய்வது ஆகியவற்றில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது

இதன்படி நடந்த ஆராய்ச்சியில், மழை மேகங்களைச் செயற்கை முறையில் மழை பெய்யச் செய்யும் சோதனையில் வெற்றியடைந்துவிட்டோம்! எந்த நேரத்திலும் விமானத்தில் சென்று -- மழை மேகங்களைச் செயற்கை முறையில் மழை பெய்யச் செய்ய முடியும்; ஆனால் இதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது பணம்தான்; செயற்கை மழை பெய்யச் செய்ய அதிகப் பணம் செலவாகும்; இதன்மூலம் கிடைக்கும் தண்ணீருக்காக மிக அதிகமான அளவில் செலவு செய்யவேண்டியதாக இருப்பதால்தான்,

(1-ம் பத்தி பார்க்க)

எம். ஜி. ஆரின் திட்டமிட்ட ஏற்பாடு -- கணக்குக் காட்டவில்லை என்பது போலித்தனமானது -- தந்தை பெரியார் கடுந்தாக்கு

‘பிணக்கு என்பது ஒரு சாக்கு’

சில சொந்த சங்கடங்கள் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டது

‘புதுக் காங்கிரசின் சலுகை தேவைப்பட்டதால் அதற்கேற்ப தன்னைத் தயார் செய்துகொண்டார்’

சென்னை, அக். 25—

‘இன்றைய நிலை’ என்ற தலைப்பில் பெரியார் அவர்கள், எம்.ஜி. ஆரின் போக்குகளைச் சுட்டிக்காட்டியும் – ‘எம். ஜி. ஆர். கிளர்ச்சி’ என்பதன் பெயரால் நடைபெறும் வன்முறைகளையும் விளக்கி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது :—

“இன்றையத்தினம் நம் நாட்டில் நடக்கும் நாசவேலை -- காலித்தனம் -- கலகம் -- வன்முறை காரியங்கள் ஆகியவைகளைச் சிந்தித்துப் பாருங்கள்.

இன்றையக் கிளர்ச்சிக்கு, ‘எம். ஜி. ஆர். கிளர்ச்சி’ என்று பெயர்; எம். ஜி. ஆர். என்றால் என்ன ?--கலைத்துறையில் செல்வாக்கும் பெற்ற ஒரு கலைஞர் என்பதோடு கலைத் துறையில் பணம் சம்பாதித்த ஒரு ஒரு பணக்காரராகவும் இருக்கலாம்.

முன்னேற்ற கழகத்தாருக்குக் கலைத் துறையிலும் சிறிது தொடுப்பு இருந்ததால், அந்த முறையில் எம். ஜி. ஆர். அரசியல் துறைக்கு இழுக்கப்பட்டார்; அதில் செல்வாக்கு வளர்ந்து தி. மு. க. பொருளாளராக ஆக்கப்பட்டார்.

பதவி கேட்டார் -- தலைவர் மறுத்தார்

இந்த நிலையில், அவருக்குத் தனது செல்வாக்கால் கழகத்தில் சிலருக்கு பதவிகள் வாங்கிக்கொடுக்க முடிந்தது; அதன் மீது, ‘நாமே அமைச்சராக ஆகலாம்’ என்ற ஆசை ஏற்பட்டு -- கழகத் தலைவரிடம் தமக்கு ஒரு அமைச்சர் பதவி கேட்டிருக்கிறார்; தலைவர் மறுத்துவிட்டதாகவும் தெரிகிறது; அதிலிருந்து கருத்து வேற்றுமை வளரத் தொடங்கியது என்று சொல்லப்படுகிறது.

கருத்துவேற்றுமைக்குக் காரணம் என்ன ?

மதுரை மாநாட்டிலும் ஏதோ சிறு பிணக்கு ஏற்பட்டதாகவும் தெரிகிறது; இந்தப் பிணக்கு கள் ஒரு சாக்குக்கு ஏற்பட்டதே தவிர உண்மையில் எம். ஜி. ஆருக்குச் சில சொந்த சங்கடங்கள் ஏற்பட்ட நிலையில், புது காங்கிரசின் சலுகை தேவைப்பட்டதாகவும் தெரிகிறது.

அதற்கேற்பத் தம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டிய அவசியம் காரணமாக, ஒரு சாக்குக்காகவே கழகத் தோழர்கள் -- அமைச்சர்களின் சொத்துக்கள் பற்றிய கணக்கு கேட்பது என்ற ஒரு பிரச்சினையை எழுப்பிக்கொண்டு---கணக்குக் கேட்கத் தொடங்கிவிட்டார்.

பழி கூறும் பிரச்சாரம்

இந்தப் பிரச்சினை, கழகத்திற்குள் நடக்கவேண்டிய பிரச்சினையே ஆகும்; இதை எம். ஜி. ஆர். வெளிப்படையாக விளம்பரப் படுத்தும் தோரணையில் ‘கணக்குக் காட்டவில்லை’ எனப் பொதுமக்களிடம் தெரிவித்து (கழகத்திற்குக் கேடு வரும்படி செய்து) விடுவேன்’ என்று பழி கூறும் பிரச்சாரம் செய்தார்.

‘இப்படிச் செய்தது கழகக் கட்டுத்திட்ட -- ஒழுங்கு முறைக்கு விரோதமானதையால், அந்தப் பேச்சைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்’ என்று கழகச் சார்பாகக் கூறப்பட்டது; அதற்கு எம். ஜி. ஆர். ‘முடியாது’ என்றார்; அப்படியானால் ‘நீங்கள் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கப்பட்டிருக்கிறீர்கள்’ என்று கழகச் சார்பாகக் கூறப்பட்டுவிட்டது. (கழக பொதுக்குழு கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டு விட்டது.)

திட்டமிட்ட ஏற்பாடே - திடீரென ஏற்படவில்லை

இதற்குப் பின்னால் இன்று வரை எம். ஜி. ஆர். சார்பாக நடைபெறுகின்ற காரியங்கள் எல்லாம் முன்னமேயே செய்து வைக்கப்பட்டிருந்த ஏற்பாட்டின்படி நடப்பதாகத்தான் சொல்லலாமே தவிர, எதிர்பாராமல் திடீர் என்று ஏற்பட்டதாகச் சொல்ல முடியவில்லையே !

அமைச்சர்கள் உட்பட அநேகருக்குக் கல்லடி -- காயம்; பொதுக் கூட்டங்களில் கலவரம்; போக்குவரத்தும் பயணிகளுக்குத் தொல்லைகள்; ஜீப், பஸ்களுக்குத் தீவைத்தல் -- நாசம் செய்தல் முதலிய காரியங்கள் நடத்தப்பட அவசியம் என்ன ? இவற்றைப் பற்றிக் கேட்பதற்காக யோக்கியமாய் ஒருவர்கூட இல்லை; ‘எவரும் கேட்க மாட்டார்கள்’ என்கின்ற எண்ணமா ?

அட்டூழியச் செயலுக்கு துணை போகும் பத்திரிகைகள்

பத்து இலட்சக் கணக்கில் சர்க்கார் சொத்துக்கள் நாசமாயின என்றால், பொதுமக்கள் சொத்துக்களுக்குத்தானே நட்டம்? கவர்னர் சென்ற வண்டியையே வழிமறித்துப் பிறகு விட்டார்கள் என்றால், மற்ற பயணிகள் எவ்வளவு சிரமப் பட்டிருப்பார்கள் ?

இவ்வளவு நாசமும் சேதமும், அட்டூழியமும் நடந்த பிறகும் -- நமது நாட்டில் உள்ள பல பத்திரிகைகள் கண்டிக்காமல் -- செய்பவர்களுக்கு உற்சாகம் ஏற்படும்படி விளம்பரம் செய்கின்றன என்றால், இவைகள் யோக்கியமான பத்திரிகைகள் ஆகுமா ? அல்லது இப்பத்திரிகைகள் எம். ஜி. ஆர். விஷயத்தில் அக்கறையும் அனுதாபமும் கொண்டு விளம்பரம் தருகின்றன என்றால், இதை யாராவது நம்ப முடியுமா ?

யோக்கியதை விரைவில் வெளியாகிவிடும்

சுமார் 6--7 ஆண்டுகளுக்கு முன்பு எம். ஜி. ஆரை எம். ஆர். இராதா சுட்டார் என்ற போது -- எம். ஜி. ஆர். உயிருக்கு ஆபத்து நேர்ந்தபோது-- இந்தப் பத்திரிகையாளர்கள் எவ்வளவு வருத்தப்பட்டனர் -- விளம்பரம் கொடுத்தனர் --, கிளர்ச்சிகள் செய்யத் தூண்டிவிட்டனர் -- என்பவைகளைச் சிந்தித்துப் பார்த்தால், இவர்கள் யோக்கியதை விளக்கமாகிவிடுமே !”

நாவலர் அறிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிப்ரவரி 21, 22 ஆகிய நாட்களில் திருச்சியில் நடைபெற்ற கழகத் தலைமைச் செயற்குழு— பொதுக் குழுக் கூட்டங்களில், பொருளாளராகஇருந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களாலேயே [illegible] ஏற்றுக் கொ[illegible]றது.

பேரறிஞர் அ[illegible]களுக்கான மருத்[illegible]ச்சைச் செலவு அ[illegible] தாமே ஏற்றுக்கொ[illegible] இன்று பேசிவரும் எம்.ஜி.ஆர். அவர்கள் கூற்று குறித்துப் பொது மக்கள் தெளிவடைவதற்காகவே இந்த விளக்கம் இப்போது தலைமைக் கழகத்தால் அளிக்கப்படுகிறது.”

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கணக்கும் பார்த்தான பிறகு -- வருமான வரித் துறையினரால் பரிசீலிக்கப்படுகிறது.

கழகம் பொதுச்செயலாளனான நான், ‘செயற்குழு -- பொதுக்குழு அக். 12, 13, 14, 15-ம் கூடும்’ என்று விடுத்த அறிவிப்பில், ‘என்னென்ன பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்படும்’ என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்; அதில் முதலாவதாக இருந்தது வரவு -- செலவுக் கணக்குகள் பரிசீலிக்கப்படும் என்பதுதான்,

இப்படி நான் அறிவித்த பிறகும், செயற்குழு -- பொதுக்குழு கூடுவதற்கு முன்னால், அக். 8-ந் தேதியே -- அதுவும் ஒரு பொதுக்கூட்டத்தில் நின்றுகொண்டு கணக்குக் கேட்டால் என்ன அர்த்தம் ? யோக்கியர் என்றால் செயற்குழுவிலோ, பொதுக்குழுவிலோ வந்து அல்லவா பேசவேண்டும் ?

பொதுக்குழு கூடும் வரையில் செக்கில் கையெழுத்துப் போட்டவர் எம்.ஜி.ஆர்.-தானே தவிர நான் அல்ல; செயற்குழு -- பொதுக்குழு முடிந்ததற்குப் பிறகு, அதுவும் இப்போது இரண்டு மூன்று நாட்களாகத்தான் ‘செக்’கில கையெழுத்துப்போட்டு வருகிறேன்; அதற்கு முன்னால் அவர்தான் போட்டார்; அது வழக்கு மன்றத்திற்கு வருமேயானால், அவர் கையெழுத்திட்ட ‘செக’ புத்தகங்களை அங்கு வைக்கத் தயார் !

234 சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்கள் -- அவைத்தலைவர் உட்பட அனைவரும் சட்டமன்றத்தில் கணக்கு வைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை, முன்பு மாதவன் அவர்கள் கொண்டுவந்தபோது, காங்கிரசார் அதனைத் தோற்கடித்தார்கள்; ‘அவனவன கணக்கை அவனவனே பார்த்தால் போதும்’ என்றார் பக்தவச்சலம்; ஆனால், கலைஞர் முதலவரான பிறகு, 1969-ல் அதைச் சட்டமாக்கி -- அதன்படி கணக்கு வைத்து வருகிறோம்.

இப்படிப்பட்ட எங்களைப்பார்த்து,யாருக்கும் தெரியாத -- யாரும் சொல்லாத ஒன்றை, தன்னை இங்கர்சாலாக -- ஏஞ்சல்சாக -- பெர்னாட் ஷாவாக--ரூசோவாக எண்ணிக்கொண்டு, ஏதோ புதிதாகக் கேட்பதுபோல, ‘கணக்கு எங்கே ?’ என்கிறார் எம்.ஜி.ஆர்.

சட்டமன்றத்தில் சொத்துக் கணக்கைப் பகிரங்கமாக வைப்பதென்பது இந்திரா காந்தியாலேயே ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று; ஆந்திரம் -- கேரளம் -- மைசூர் போன்ற வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அந்த முறையை நாங்கள் சட்டமாக்கியிருக்கிறோம்.

அதற்கென்று தனி பாரமே இருக்கிறது; உறுப்பினர் சொத்து -- குடும்ப உறுப்பினர்கள் மீதான சொத்து -- அசையும் சொத்து-- அசையாச் சொத்து -- வங்கி இருப்பு -- மனைவிக்குச் சொந்தமான நகை விவரம் -- தங்கம் ஆகியவை பற்றியெல்லாம் அதில் கேட்கப்பட்டிருக்கிறது; ‘இதில் கண்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையே’ என்றுள்ள வரிகளின் கீழ் கையெழுத்திட வேண்டும்; அதன்படி நானும் -- கலைஞரும் மற்றவர்களும் கொடுத்திருக்கிறோம்; இதன் நகல் எச். வி. ஹண்டேயிடமும் இருக்கும் -- கே. டி. கே. தங்கமணி கையிலும் இருக்கும்.

அந்தக் கணக்கில் தவறு இருந்தால் நீதிமன்றத்திற்குச் செல்லட்டும்; ஆண்மை இருந்தால்-- நாணயம் இருந்தால் அங்கு எடுத்துச் சொல்லட்டும் !

இந்தச் சட்டம் அமுலான 1969-ம் ஆண்டு மட்டுமே கணக்குத் தந்துவிட்டு மற்ற மூன்று ஆண்டுகளாகக் கணக்குத் தராமல் இருப்பவர் எம்.ஜி.ஆர்.; இப்படிப்பட்டவர்தான் நம்மிடம் கணக்குக் கேட்கிறார் !

‘ஏன் கணக்குத் தரவில்லை ?’ என்று கேட்டு அவருக்கு 13 தடவை நோட்டீசு அனுப்பப்பட்டிருக்கிறது; என்றாலும், கணக்கைத் தரவில்லை எம்.ஜி.ஆர்.; அப்படிப்பட்டவர்தான், ‘உங்களுடைய கணக்கு எங்கே’ என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார் !

‘இலஞ்ச ஊழலை ஒழிக்கப் போகிறேன்’ என்கின்ற எம். ஜி. ஆர்., தம் கட்சிக்கு அமைப்பாளராக ஒருவரை நியமித்திருக்கிறார்; அவரைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை -- ஊருக்கே தெரியும் !

‘மதுவிலக்கை ;நிலைநிறுத்தப் போகிறேன்’ என்கின்ற அவர், பொருளாளராக ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்; அவரைப் பற்றியும் நமக்கு நன்றாகத் தெரியும் !

‘மதுவிலக்குககாகப் பாடுபடப் போகிறேன்’ என்கின்ற அவர், தன்னுடைய ரசிகர்களையாவது குடிக்காமல் பார்த்துக் கொண்டால் போதும !

தியாகராச பாகவதருக்குக்கூடச் ரசிகர்கள் இருந்தார்கள்; பி. யு. சின்னப்பாவுக்கு ரசிகர்கள் இருந்தார்கள்; டி. ஆர். இராஜகுமாரிக்கும் விசிறிகள் இருந்தார்கள் -- அவர்களெல்லாம் எங்கே !

இங்கே கூடியிருக்கும் இந்தப் பட்டாளம், ரசிப்புக்காக வந்த பட்டாளம் அல்ல -- கொள்கைக்காக வந்த பட்டாளம் ! மனைவி -- மக்களை மறந்து கொள்கைகளைக் காப்பதற்காக வந்த பட்டாளம் ! வீடு வாசலை மறந்த பட்டாளம் !

ரூ. 7,000 கோடி கறுப்புப் பணத்தில், மூவாயிரம் கோடி ரூபாய் சினிமாக்காரர்களிடம்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள் !

இன்றுள்ள பெரிய பெரிய பத்திரிகைக்காரர்கள் எல்லாம் நம்மை எதிர்க்கிறார்கள்; ‘இலஞ்சம் -- ஊழல்’ என்று எழுதுகிறார்கள்; அவர்களிடம் உள்ள ஊழலெல்லாம் நமக்குத் தெரியாதா ? எந்த வழியில் காகிதம் வாங்குகிறார்கள் -- விற்கிறார்கள் என்பதெல்லாம் எங்களுக்குப் புரியாதா ?

நான் அவர்களைக் கேட்கிறேன் -- ‘எதிர்காலத்தில் இந்த நாட்டை சர்வாதிகார நாடாக்கும் நினைப்பா அவர்களுக்கெல்லாம்’ என்று !”

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

★

26--10--72

கரம்பக்குடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: கே. வி. சுப்பையா எம். எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, க. வீரையா எம்.பி., அ. பெரியண்ணன் மற்றும் பலர்.

வறட்சியின் விளைவு

அமெரிக்காவிடம் செஞ்சீனு கோதுமை வாங்குகிறது

வாஷிங்டன், அக். 24—

சீனாவில் வரட்சி நிலை காரணமாக ஏற்பட்ட கோதுமைப் பற்றாக் குறையை ஈடு கட்டுவதற்காக மட்டுமன்றி, ஆண்டுதோறும் தோன்றும், 1.50 கோடி கூடுதல் வயிறுகளை நிரப்புவதற்காகவும் அமெரிக்காவிடமிருந்து அதிகப் படியாகக் கோதுமையை சீனா வாங்கவேண்டியிருக்கும்”

என்று, அமெரிக்க அரசாங்க விவசாயத்துறை வெளியிடும் ‘அந்நிய விவசாயம்’ என்ற வார பத்திரிகைத் தகவலிலிருந்து தெரிகிறது.

சீனா, அக்டோபர் முதல்தேதி 43 இலட்சம் டன் கோதுமை வாங்கியது; இதில் 4 இலட்சம் டன் அமெரிக்காவிடம் வாங்கியதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (14, [illegible]) [illegible] இதழ் வெளியிடப்படுகிறது.